# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## Provincial Department of Education, Northern Province

## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 – (2023)

| தரம் - 06 | புவியியல் – I,II | நேரம்: 2.00 மணித்தியாலங்கள் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..........................................................................................

பகுதி - I

➢ **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

➢ **மிகப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

01. இலங்கையின் பண்டைய நீரியல் நாகரிகத்தின் மையமாக அமைந்துள்ள மாவட்டம்,

 1. காலி  2. யாழ்ப்பாணம்  3. கொழும்பு  4. அனுராதபுரம்

02. மனித வளங்களில் ஒன்று,

 1. நீர்வீழ்ச்சி  2. பூங்கா  3. மலை  4. தாழ்நிலம்

03. தாவரங்களின் வளர்ச்சிக்குத் தேவையான வாயு எது?

 1. நைதரசன்  2. மீதேன்  3. ஓசோன்  4. ஆகன்

04. சிறிய அளவிலான குடிசைக் கைத்தொழில்களுக்கான எடுத்துக்காட்டுகள்

 1. பிளாஸ்ரிக், பொலியெஸ்ரர்  2. பிளாஸ்ரிக், கயிறுதிரித்தல்

 3. பொலியெஸ்ரர், கயிறு திரித்தல்  4. கயிறு திரித்தல், ஆடை தைத்தல்

05. உலகின் மிகப்பெரிய தீவாக இருப்பது,

 1. கிறீன்லாந்து  2. கியூபா  3. இலங்கை  4. சிசிலி

06. இலங்கையின் பிரதான வர்த்தகமையம் மற்றும் முக்கிய நிர்வாக நகரத்தின் சரியான ஒழுங்கு,

 1. கொழும்பு, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரகோட்டை  2. காலி, கொழும்பு

 3. ஸ்ரீ ஜெயவர்த்தனபுரகோட்டை, காலி  4. ஸ்ரீ ஜெயவர்த்தனபுரகோட்டை, கொழும்பு

07. அமில மழை மூலம் தீங்கு விளைவிக்கும் விளைவுகளில் ஒன்று,

 1. ஆஸ்துமா  2. நீர்மாசடைதல்  3. இருமல்  4. நுரையீரல் புற்றுநோய்

08. சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு காலங்களில் நமக்கு மிகவும் பழக்கப்பட்ட ஒலி எழும்பும் பறவை எது?

 1. காகம்  2. கிளி  3. செண்பகம்  4. ஆசியக்குயில்

09. சக்தியின் பயன்பாட்டிற்கு மாற்றீடாகப் பயன்படுத்தப்படுவது,

 1. மின்சாரம்  2. குளிர்சாதனப்பெட்டி  3. உயிரியல் வாயு  4. வாயு அடுப்பு

LMDMUnit

10. மகரந்தச் சேர்க்கைக்கு உதவும் பூச்சிகள்.

1. வண்ணாத்துப்பூச்சி, தேனீ
2. தேனீ, வௌவால்
3. வண்ணாத்துப்பூச்சி, ஆந்தை
4. தேனீ, எலி

➢ **தரப்பட்டுள்ள வாக்கியங்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (x) எனவும் அடைப்புக்குறிக்குள் அடையாளமிடுக.**

11. இலங்கையில் உள்ள ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கும் பெயரும் இலக்கமும் உண்டு. ( )

12. காற்றுவிசைமானி மழைவீழ்ச்சியை அளக்கப் பயன்படுத்தப்படுகின்றது. ( )

13. இலங்கையிலுள்ள பாடசாலைகள் கிராமம், நகரம், மலை மற்றும் கரையோரம் போன்ற பல்வேறுபட்ட சூழலில் அமைந்திருக்கின்றது. ( )

14. திருக்கோணேஸ்வரம் காலி துறைமுகத்திற்கு அருகில் அமைந்துள்ளது ( )

15. பல கிராமங்கள் ஒன்றிணைவதன் மூலம் கிராம உத்தியோகத்தர் பிரிவு உருவாக்கப்படுகின்றது. ( )

➢ **அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ள சொற்களில் சரியான சொற்களைத் தெரிவு செய்து இடைவெளியைப் பூர்த்தி செய்க.**

16. இலங்கை இந்தியாவிலிருந்து ..................................................... மூலம் பிரிக்கப்பட்டுள்ளது.

17. ..................................................... பயன்படுத்துவது சக்தியை சேமிப்பதற்கான மற்றுமொரு வழியாகும்.

18. சமையலறை மற்றும் தோட்டக் கழிவுகளிலிருந்து ............................................. தயாரிக்கலாம்.

19. ஏரி, அணைக்கட்டு, ஆறு மற்றும் கடல் ஆகியவற்றிற்கு அருகில் வாழும் பெரும்பாலான மக்களின் முக்கிய தொழிலாக ................................................ இருக்கின்றது.

20. ஓர் குறித்த பகுதியில் அதிகளவான சூரியவெப்பம் மற்றும் வெப்பநிலையினால் ..................................... தன்மை ஏற்படுகின்றது.

( உரம் /பாக்குநீரிணை / கச்சிதமான ஒளியுள்ள மின்குமிழ் / வரட்சியான / மீன்பிடி)

(20x2 =40 புள்ளிகள்)


LMDMUnit

## பகுதி -II

**முதலாம் வினா கட்டாயமானது. ஏனைய வினாக்களில் நான்கு வினாக்களைத் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01. a. இலங்கை புறஉருவப்படத்தில் குறிக்கப்பட்ட ஆங்கில எழுத்துக்களுக்குப் பொருத்தமான இடங்களின் எழுத்துக்களை அடைப்புக்குறிக்குள் எழுதுக.


1. யாழ்ப்பாணம் (.........)
2. வவுனியா (.........)
3. புத்தளம் (.........)
4. இரத்தினபுரி (.........)
5. மொரட்டுவ (.........)
6. பொலன்னறுவை (.........)




(06x1= 06 புள்ளிகள்)

b. உலகப் புறஉருவப்படத்தில் குறிக்கப்பட்ட ஆங்கில எழுத்துக்களுக்குப் பொருத்தமான இடங்களின் எழுத்துக்களை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

1. கிறீன்லாந்து (.........)
2. அவுஸ்திரேலியா (.........)
3. இந்து சமுத்திரம் (.........)
4. இந்தியா (.........)
5. ஆபிரிக்கா (.........)
6. மடகஸ்கார் (.........)




(06x1= 06 புள்ளிகள்)

2. 1. மின்சாரத்தின் தேவை அதிகரித்து வருவதற்கான காரணங்கள் மூன்று எழுதுக.
2. நீர் மாசடையும் வழிகள் நான்கு எழுதுக.
3. உமது தேவையைப் பெற்றுக் கொள்ள நீரைப் பயன்படுத்தும் வழிகள் ஐந்து குறிப்பிடுக.

(3+4+5=12 புள்ளிகள்)

3. 1. குளிர்ச்சியான மென்காந்தை உணரக்கூடிய இடங்கள் மூன்று எழுதுக.
2. வானிலை தகவல்களை அறிய வேண்டியவர்கள் நால்வரைத் தருக.
3. வானிலை மூலகங்கள் ஐந்து எழுதுக.

(3+4+5=12 புள்ளிகள்)

4. 1. இடம்பெயர் பறவைகள் மூன்று எழுதுக.
2. எமது சூழலில் விலங்குகள் எதிர்கொள்ளும் சவால்கள் நான்கு எழுதுக.
3. தாவரங்களிலிருந்து பெற்றுக்கொள்ளும் பயன்கள் ஐந்து எழுதுக.

(3+4+5=12 புள்ளிகள்)

5. 1. பின்வரும் தொழிற்சாலைகளிற்குரிய பிரபல்யமான இடங்களைக் குறிப்பிடவும்.
a. பாய் :-
b. முகமூடி :-
c. பிரம்பு உற்பத்திகள் :-

2. அரசாங்கத்தினால் கட்டுப்பாட்டு விலையில் மருத்துவம் மற்றும் போக்குவரத்திற்காக வழங்கப்படும் சலுகைகளைத் தருக.
a. போக்குவரத்து
b. மருத்துவம்

3. பொதுச் சேவைகள் ஐந்து எழுதுக.

(3+4+5=12 புள்ளிகள்)

6. 1. உங்கள் வீட்டுக்கு அருகில் உள்ள இயற்கைச் சூழலின் அடிப்படை அம்சங்கள் மூன்று தருக
2. முறையற்ற நிலப்பயன்பாட்டினால் ஏற்படும் விளைவுகள் நான்கு எழுதுக.
3. நிலத்தின் பயன்பாடுகள் ஐந்து தருக.

(3+4+5=12 புள்ளிகள்)

7. 1. மழைவீழ்ச்சி செயன்முறையில் உள்ளடங்கும் செயற்பாடுகள் மூன்று தருக.
2. பிரதான நான்கு திசைகளையும் குறிப்பிடுக.
3. வானிலை பற்றிய தகவல்களை அறிந்து கொள்வதினால் கிடைக்கும் பயன்கள் ஐந்து தருக.

(3+4+5=12 புள்ளிகள்)

LMDMUnit